O.S.No.117/2018 – Date : 01.12.2025

PW1 – நல்லம்மாள்(எ) தங்கமணி

சாட்சி மீண்டும் வரவழைக்கப்பட்டு 1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை

1ம் பிரதிவாதி அழகம்மாள் எனது தாயார் என்றால் சரி. 2ம் பிரதிவாதி மகாராணி எனது அக்கா என்றால் சரி. எனது அக்காவிற்கு 65 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரி. எனது தாயாருக்கு 85 வயதுக்கு மேல் இருக்கும் என்றால் சரி.

எனது தாத்தா பெயர் என்ன என்றால் முத்து கருப்ப கவுண்டர் ஆகும். எனது தாத்தாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 பேர் வாரிசுகள். எனது தாத்தாவிற்கு எத்தனை ஏக்கர் சொத்து இருந்தது என்றால் 5 ஏக்கர் இருந்தது. எனது தாத்தா பெயரில் உள்ள சொத்துக்களை வாய்மொழியாக பாகம் பிரித்துக்கொண்டதாக கூறுகிறேன் என்றால் சரி. எந்த வருடம் பாகம் பிரித்துக்கொண்டார்கள் என்றால் தெரியாது. வாய்மொழியாக பாகம் பிரியும்போது என் அப்பாவும் என் தாத்தாவும் உயிருடன் இருந்தார்களா என்றால் என் தாத்தா உயிருடன் இல்லை.

என் தகப்பனார் வெங்கடாசலத்திற்கு எத்தனை ஏக்கர் வாய்மொழியாக பிரிந்தது என்றால் 5 ஏக்கர் பிரிந்தது. அதற்கு பட்டா எண், சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. நான் தாவா சொத்தில்

சுவாதீனத்தில் இல்லாததால்தான் எனக்கு சர்வே எண், பட்டா எண் தெரியவில்லை என்றால் சரியல்ல. எனது பெரியப்பா அய்யண்ணனுக்கு எத்தனை ஏக்கர் பாகமாக கொடுத்தார்கள் என்றால் தெரியாது. அந்த சொத்தின் சர்வே எண், பட்டா எண், விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. என் சித்தப்பா மோகனுக்கு எத்தனை ஏக்கர் ஒதுக்கினார்கள் என்றால் தெரியாது. அந்த சொத்தின் சர்வே எண், பட்டா எண், விஸ்தீர்ணம் தெரியுமா என்றால் தெரியாது. என் அப்பா எந்த வருடம் இறந்தார் என்றால் எனக்கு 2வயது இருந்தபோது இறந்தார். என் அப்பாவின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தாத்தாவின் வாரிசு சான்றிதழ், இறப்பு சான்றிதழ் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

எனது பெரியப்பா அய்யண்ணன் சேலம் முதலாவது கூடுதல் மாவட்ட நீதிமன்றத்தில் ஓஎஸ். 40/2022 வழக்கு தாக்கல் செய்தார் என்றால் எனக்கு தெரியாது. அந்த வழக்கு இன்னும் நிலுவையில் உள்ளது என்றால் சரி. அந்த ஓஎஸ்.40/2022 வழக்கில் இந்த வழக்கின் சர்வே எண்.120/1, 120/4 ஆகிய சொத்துக்கள் காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் தெரியாது. ஓ.எஸ்.40/2022 வழக்கில் எனது தாயார், சகோதரி, எனது சித்தப்பா மோகன் ஆகியோர் பிரதிவாதிகளாக உள்ளார்கள் என்றால் சரி. நானும் அந்த வழக்கில்

ஒரு பிரதிவாதி என்றால் சரி. அந்த வழக்கையும் இந்த வழக்கின் வழக்கறிஞுரை வைத்து நடத்தி வருகிறேன் என்றால் சரி. ஓஎஸ்.40/2022 வழக்கை எனது தாத்தா கருப்பகவுண்டர் காலத்திலிருந்தே பாகம் பிரிக்காமல் கூட்டாக அனுபவித்து வருவதாகவும் பாகம் பிரித்து தரக்கோரி எனது பெரியப்பா அய்யண்ணன் வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரி.

எனது தகப்பனார் இறந்த பிறகு எனது தாயாரான 1ம் பிரதிவாதி தனி சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் நானும் 1,2 பிரதிவாதிகளும் கூட்டாக அனுபவித்து வந்தோம். என் அக்கா மகாராணிக்கு 1978ல் திருமணம் ஆனது எறால் இருக்கலாம். 1985ல் எனக்கு திருமணம் ஆனது என்றால் சரி. என் அக்காவிற்கும், எனக்கும் திருமணம் ஆன பிறகு, என் தாயார் தனி சுவாதீனத்தில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல. எனக்கு திருமணம் ஆன பிறகு நான் என் கணவர் வீட்டில்தான் குடியிருக்கிறேன் என்றால் சரியல்ல, அங்கும் குடியிருப்பேன்.

எனக்கு திருமணம் ஆனதிலிருந்து நான் தாவா சொத்திற்கே போனதில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து எத்தனை ஏக்கர் என்றால் 5 ஏக்கர். எனது அம்மா, எனது அக்காவிற்கு எந்த வருடம் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 7,8 வருடம் இருக்கும்.

1ம் பிரதிவாதி, 2 மற்றும் 4ம் பிரதிவாதிக்கு எந்த வருடம் செட்டில்மெண்ட் எழுதி வைத்தார் என்றால் 7,8 வருடம் இருக்கும். அந்த தானசெட்டில்மெண்ட் தேதியிலிருந்து 2 மற்றும் 4ம் பிரதிவாதிகள் சுவாதீனத்தில் இருந்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 2ம் பிரதிவாதி மகாராணிக்கு 13.5.2002 தேதியில் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் 31.5.2002 தேதியில் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லும், என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி, 4ம் பிரதிவாதிக்கு 13.5.2002ல் எழுதி கொடுத்த தானசெட்டில்மெண்ட் பத்திரமும் சட்டப்படி செல்லும், என்னை கட்டுப்படுத்தும் என்றால் சரியல்ல. எனது பெரியப்பா அய்யண்ணனை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரி.

குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேண்டுகோளின் பேரில் ஒத்தி வைக்கப்படுகிறது.

Sd/- S.Sumathy,
Principal District Judge, Salem.